உ
சிவமயம்





திருப்பூங்குடி என வளங்கும்
புங்குடுதீவை பிறப்பிடமாகவும்
பிரான்சை வதிவிடமாகவும் கொண்ட

# அமரர் நடேசன் சத்தியசீலன்

அவர்களின் சிவப்பேறு குறித்த

# நினைவு மலர்

01.10.2018

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



திருப்பூங்குடி என வளங்கும்
புங்குடுதீவை பிறப்பிடமாகவும்
பிரான்சை வதிவிடமாகவும் கொண்ட

அமரர்

# திரு. நடேசன் சத்தியசீலன்

அவர்களின்

சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரும்பாய்
26
•
08
•
1964



உதிர்வாய்
01
•
09
•
2018

# அமரர் நடேசன் சத்தியசீலன்

## திதி வெண்பா

விண்ணோங்கு விளம்பி வருடம் ஆவணித் திங்கள்
மேதினியில் அபரபக்க ஷஷ்டி திதிதனில் – நீதியுயர்
புங்கையூர் பதியுதித்த நடேசன் சத்திய சீலன், கூண்டுவிட்டு
சிவமயமாய்த் தங்கினானே சிவனடியின் காண்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

எங்கள்
இதயத் தெய்வம்,
இப்பூவலகில் எம் வாழ்வுக்கும்,
வளர்ச்சிக்கும் அயராது உழைத்து
அன்பு, அரவணைப்பு, அயராத உழைப்பு
அடுத்தவர் மனங்கோணாத பண்பு
அனைத்தும் ஒருங்கே நிறைந்த எங்கள்
இதயத்தெய்வம் தன்னை
மெழுகுவர்த்தியாக உருக்கி எம்மை வாழ
வைத்து இறக்கும் வரை இன்முகத்துடன்
வாழ்வாங்கு வாழ்ந்து இன்று வானுறையும்
தெய்வமாகிய எமது குடும்பத்
தெய்வத்தின் நினைவலைகளை
நெஞ்சிற் சுமந்து சத்திய தீபம்
என்னும் மலரை அவர்
பாதக் கமலத்தில்
வைத்து வணங்கி
சமர்ப்பணம்
செய்கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்

# பிள்ளையார் துதி

திருவாக்கும் செய்கருமங் கைகூட்டுஞ் செஞ்செற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலார் வானோரும் ஆனைமுகத்தானைக்
காதலாற் கூப்புவர் தம்கை

# தேவாரம்

ஊழியு மின்பமுங் காலமாகி
யுறருந் தவமாகி
ஏழிசையின் பொருள் வாழும் வாழ்க்கை
வினையின் புணர்ப்பாகி
நாழிகையும் பல ஞாயிறாகி நளிர்
நாரையூர் தன்னில்
வாழியர் மேதகு மைந்தர் செய்யும்
வகையின் வினை வாமே.

ஒருமையே யல்லேன் எழுமையும் அடியேன்
அடியவர்க் கடியனு மானேன்
உரிமையால் உரியேன் உள்ளமும் உருகும்
ஒண்மலர்ச் சேவடி காட்டாய்
அருமையாம் புகழார்க் கருள் செயும் பாச்சி
லாச்சிரா மத்தெந் தம்மடிகள்
பெருமைகள் பேசி சிறுமைகள் செய்யில்
இரவலா தில்லையோ பிரானார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

தரிக்கிலேன் காய வாழ்க்கை சங்கரா போற்றி வான
விருத்தனே போற்றி யெங்கள் விடலையே போற்றி யொப்பி
லொருத்தனே போற்றி யும் பர தம்பிரான் போற்றி தில்லை
நிருத்தனே போற்றி யெங்கணின் மலா போற்றி போற்றி

## திருவிசைப்பா

தில்லையம்பலத் தெங்கள் தேவ தேவைத்
தேறிய அந்தணர் சிந்தை செய்யும்
எல்லையதாகிய எழில் கொள் சோதி
என்னுயிர் காவல் கொண்டிருந்த எந்தாய்
பல்லையார் பசுந்தலை யோடிடறிப்
பாதமென் மலரடி கோலநீ போய்
அல்லினில் அருநடம் ஆடி லெங்கள்
ஆருயிர் காவலிங் கரிது தானே

## திருப்பல்லாண்டு

தாதையைத் தாளற வீசிய சண்டிக்கிவ்
வண்டத்தொடுமுடனே
பூதலத்தோரும் வணங்கப் பொற்கோவிலும்
போனகமும் அருளிச்
சோதிமணிமுடித் தாமமு நாமமுந்
தொண்டர்க்கு நாயகமும்
பாதகத் துக்குப் பரிசு வைத்தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்.

இறவாத அன்பு வேண்டிப் பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னையென்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்து பாடி
அறவா நீயாடும் போதுன்னடியின் கீழ் இருக்க என்றார்.

## திருப்புகழ்

பிறவி அலை ஆற்றினில் புகுதாதே
பிரகிருதி மார்க்கம் உற்று அலையாதே
உறுதி குரு வாக்கியப் பொருளாலே
உனது பத காட்சியைத் தருவாயே
அறுசமய சாத்திரப் பொருளோனே
அறிவுள் அறிவார் குணக் கடலோனே
குறுமுனிவன் ஏத்தும் முத்தமிழோனே
குமரகுரு கார்த்திகைப் பொருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலாதுயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்

## அபுதத் திருவந்தாதி

ஒன்றே நினைத்திருந்தேன் ஒன்றே துணிந்தொழிந்தேன்
ஒன்றேயென் உள்ளத்தின் உள்ளடைந்தேன் – ஒன்றேகாண்
கங்கையான் திங்கட் கதிர்முடியான் பொங்கொளி சேர்
அங்கையாற காளாம் அது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமுருகாற்றுப் படை

குன்றம் எறிந்ததுவுங் குன்றப்போர் செய்ததுவும்
அன்றங் கமரரிடர் தீர்த்ததுவும் – இன்றென்னைக்
கைவிடா நின்றதுவுங் கற்பொதும்பிற் காத்ததுவு
மெய்விடா வீரன் கை வேல்

# பொன்வண்ணத்தந்தாதி

சிந்தனை செய்ய மனமமைத்தேன் செப்ப நா வமைத்தேன்
வந்தனை செய்யத் தலையமைத்தேன் கை தொழவமைத்தேன்
பந்தனை செய்வதற் கன்பமைத்தேன் மெய்யரும்ப வைத்தேன்
வெந்த வெண்ணீறணி யீசற்கிவை யான் விதித்தனவே.

# ஆளுடையார் திருமும்மணிக்கோவை

பிறவியெனும் பொல்லாப் பெருங்கடலை நீந்தத்
துறவியெனுந் தோற்றோணி கண்டீர் – நிறையுலகிற்
பொன்மாலை மார்பன் புனக்காழிச் சம்பந்தன்
தன்மாலை ஞானத் தமிழ்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் நடேசன் சத்தியசீலன் அவர்களின் வாழ்க்கை வரலாற்றுத் துளிகள்

இந்துசமுத்திரத்தின் முத்தாகத் திகழும் இலங்கைமணித் திருநாட்டின் கடலலைகள் முத்தமிட்டு தாலாட்டி நிற்கும் தன்னிகரில்லாத் தமிழ்மொழி எங்கள் கண்ணெனத் தோள் தட்டி நிற்கும். வீர வேங்கைகள் உதித்த புண்ணிய பூமியாகிய யாழ்ப்பாணத்தின் முகம்போல அமைந்த சப்ததீவுகளின் நடுநாயகமாக விளங்குவது திருப்பூங்குடி என வழங்கும் புங்குடுதீவாகும். அங்கு சைவமும், தமிழும் சிறப்புப் பெற்றதும் கல்விமான்கள் பிரபல வர்த்தகர்கள் ஆன்மீகப் பெரியோர்கள் வாழ்ந்த பூமியுமாகும். வானளாவ உயர்ந்த கோபுர தரிசனத்துடன் கூடிய ஆலயங்கள் நாலாபுறமும் காவல் தெய்வங்கள் அமையப்பெற்ற இப்புனித பூமியில் வீராமலை என்னுமிடத்தில் 10ம் வட்டாரப் பகுதியில் வாழ்ந்த நடேசன் சரசலட்சுமி(சரோஜினி) தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனாக அமரர் சத்தியசீலன் அவர்கள் 1964ம் ஆண்டு ஆவணித் திங்கள் 26ம் நாள் இப்புனித புண்ணிய பூமியில் வந்து பூத்தார்.

இவரின் உடன்பிறப்புச் சீலர்களாக ஜெயசீலன், ஞானசீலன், அம்பிகைசீலன், சகோதரி நாகஜனனி, தர்மசீலன் ஆகியோர்களாவார்கள். தன் ஆரம்ப காலத்தில் குதூகலிக்கும் குடும்பத்தோடு வாழ்ந்து வந்தார்.

இவர் ஆரம்பக் கல்வியை இராஜராஜேஸ்வரி வித்தியாலயத்திலும், உயர் கல்வியை ஸ்ரீகணேச மகாவித்தியாலயத்திலும் கற்றுவந்தார். அக்காலப்பகுதியில் கண்ணியம் மிக்க நற்பண்புள்ளவராக வாழ்ந்து வந்தார். அவ்வேளை உயர்கல்வியைப் பூர்த்தி செய்யமுடியாத காலகட்டத்தில் உடன்பிறவாச் சகோதரரின் வியாபாரத் தளத்தில் உதவியாளராகக் கடமை புரிந்தார். அதனைத் தொடர்ந்து கொழும்பு மாநகரிலும் மட்டக்களப்பு மகாராஜன் கொம்பனியிலும் உதவியாளராகப் பணி புரிந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தருணத்தில் நாட்டின் சூழ்நிலையால் வெளியூர் புறப்பட விருப்பம் கொண்டதால் 1984ம் ஆண்டு ஜேர்மன் நாட்டை வந்தடைந்தார். அங்கிருந்து இரு வருடங்களின் பின் 1986ம் ஆண்டு பிரான்ஸ் தேசத்திற்கு வந்து தனது வாழ்விடத்தை அமைத்துக் கொண்டார். பிரான்சில் உணவக உதவியாளராக பணிபுரியும் பொழுது திருமண வயதை அடையப் பெற்றதால் பெற்றோரின் வேண்டுகோளின்படி புங்குடுதீவு 10ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வட்டக்கச்சியை வாழ்விடமாகவும் கொண்ட கண்ணியமிக்க குடும்பமான பரமலிங்கம் அன்னலெட்சுமி (ராசம்) தம்பதியினரின் சிரேஷ்ட புத்திரியாகிய சாந்தினி எனும் சற்குணவாள் சுவிஸ்சலாந்தில் வசித்திருந்த பொழுது இவருக்கு மணவாட்டியாகக் கிடைக்கப்பெற்று 1991ம் ஆண்டு தை மாதம் 19ம் நாள் திருமணம் இனிது நிறைவெய்தியது.

இருவரும் காதலரொருவர் கருத்தொருமித்து வாழ்வது போல் வாழ்ந்த காலத்தில் கண்ணகி அம்மனின் அருட்கடாசத்தால் வந்துதித்த முக்கனிகள் தான் சயந்தனா, சயந்தன், சுகிர்த்தனா ஆவார்கள்.

"பெறுமவற்றுள் யாமறிவதில்லை அறிவறிந்த மக்கட் பேறல்ல பிற" என்ற வள்ளுவர் கூற்றுக்கமைய நன்மக்களைப் பெற்றதில் பெருமகிழ்வு கொண்டார். ஆசைமகள் சயந்தனா சிறந்த பட்டப்படிப்பை மேற்கொள்கிறார். சிறப்புமிக்க செயல்வீரனாக மகன் சயந்தன் வேலைவாய்ப்பைப் பெற்று முன்னேற்றங் கண்டு வருகிறார். கடைக்குட்டி சுகிர்த்தனா தனது கல்வியில் சிறந்த பெறுபேற்றைப் பெற்று கற்றலைத் தொடர்ந்துகொண்டிருக்கிறார். இது அவரின் முயற்சியின் முன்னேற்றமாகும். "தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து முந்தியிருப்பச் செயல்" என்ற வள்ளுவர் கூற்று மிகப் பொருத்தமாகும்.

அத்தோடு தன் அன்பு மைத்துன மைத்துனிகளாக பாலினி, இந்திரா, சுரேஸ், ரமேஸ், குணேஸ், ரகு, ரேணு ஆகியோரையும் அணைத்து வாழ்ந்தார். இவரின் திருமண வாழ்வின் பின் தனது விடா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முயற்சியால் தனக்கென ஓர் சொந்தத் தொழிலாக தனது மனையாளின் பெயரிலேயே (சாந்திபவன்) உணவகம் ஒன்றை 1993ல் ஆரம்பித்து நடத்தினார். இவ்வுணவகம் பாரிஸ் நகரத்தில் முதன்முதலாக ஆரம்பிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. தொடர்ந்து இவரது முன்னேற்றப்பாதை பலரும் புகழத்தக்க அளவுக்கு மேன்மை பெற்றது.

அமரர் சத்தியசீலன் குணத்திற்கோர் நற்குணவான், புன்சிரிப்பில் புன்னனை வேந்தன். அனைவரையும் அன்பு கொண்டு அழைக்கும் அரவணைப்பாளன். தன்னை நாடிவருவோரை நட்புணர்வுடன் தன் புன்னகையினால் வரவேற்கும் உத்தமசீலன். குடும்பத்திற்கேற்ற தலைவனாகவும், கடமையுணர்ச்சி உடையவராகவும், உழைப்புக்கோர் உத்தம புருசராகவும் வாழ்ந்து காட்டியவர். அதற்கேற்ப மனையாளையும் அமைத்துக்கொண்டதால் இணைபிரியா இல்லாளுடன் இணைந்தே தனது உழைப்பை முன்னேற்றிக் கொண்டார். மனைவி சாந்தியும் அவருக்கு தோளோடு தோள் நின்று உறுதுணை புரிந்தே வாழ்வை வளம் படுத்தினார்.

இவர் பற்பல உணவகங்களை 1998ம், 1999ம், 2002ம் 2003ம் காலப்பகுதிகளில் ஆரம்பித்து Gare de Norde, La Chapelle) பகுதிகளில் "சாந்தி பவன்" என்று பெயரிடப்பட்ட உணவகங்களையே நடத்தி வந்தார்

இத்தொழிலை 2009ம் ஆண்டுடன் நிறைவுசெய்துவிட்டு தொடர்ந்து 2010ம் ஆண்டிலிருந்து Tranport வியாபாரத்தினை ஆரம்பித்து அதனைச் செவ்வனே செய்து அதிலும் முன்னேற்றம் கண்டார். தொடர்ச்சியாக தொழிலைச் செய்து வந்ததால் சிறு சிறு சுகயீனங்களுக்கு ஆளானார். அதனால் அடிக்கடி வைத்தியசாலை சென்று வைத்தியம் செய்யும் நிலை ஏற்பட்டது.

இங்ஙனமாக காலத் தொடர்ச்சியில் 2017ம் ஆண்டு தீவிர சுகவீனத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திற்கு ஆளாகி வைத்தியசாலையில் பல மாதங்கள் சிகிச்சை பெற்று வந்தார். இந்நிலையால் உடல் நிலை பாதிக்கப்படும் நிலைக்கு ஆளாக்கப்பட்டார். இருப்பினும் ஓரளவிற்கு உடல் நிலையில் மாற்றம் ஏற்பட்டதால் அவரது இல்லத்திலிருந்து பராமரிக்கப்பட்டார். அவ்வேளையில் திடீரென 24.08.18 கடுமையான சுகயீனத்திற்கு உள்ளாக்கப்பட்டு Gare de Nordeவைத்தியசாலை அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டார்.

அவரின்நிலை மோசமடைந்து எதுவித பேச்சற்ற நிலையில் காலனவன் கயிறுதர தாய், மனையாள், பிள்ளைகள் ஏங்கித் தவிக்க எதுவித பதிலும் எவருக்கும் கூறாமல் தனிவழியே 1.09.2018 ஆவணித் திங்கள் 16ம் நாள் சனிக்கிழமை அமரபக்க ஷஷ்டி திதியில் ஏறெடுத்துப் பார்க்காமலும் இறைவன் தாள் சேர்ந்து கொண்டார்.

"உறங்குவது போலும் சாக்காடு
உறங்கி விழிப்பது போலும் பிறப்பு"

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனைவியின் மனக்குமுறல்

என்னுயிருக்குயிரான தெய்வமே
என்னைவிட்டுப் பிரிந்து எங்கு சென்றாய்
பொன்னுறல் மைந்தா பூவுலகில் உன்னை
போற்றியே கூறும் வார்த்தை கேட்டு
என்னுள்ளம் வெடிக்கும் இந்நிலையை
ஏன்? ஐயா, எனக்குத் தந்தீர்கள்
சாந்தி சாந்தி என்று கூப்பிடும் குரல்தான்
என் காதில் கேட்குதையா இனி
எப்போதையா வந்து கூப்பிடுவீர்
பொட்டிழந்தேன் பூவிழந்தேன்
புன்னகை இழந்து புலம்புகின்றேன் கட்டிய காலத்தில்
என்னைக் கண்கலங்க வைக்கவில்லை
கருணைக்கடலே எங்கு சென்றாய்?
பிள்ளைகள் பிள்ளைகள் என்று பிதற்றித் தவிப்பாயே
பிள்ளைகளை விட்டுப் பிரிய எப்படி மனம் வந்ததோ
கல்லையும் கனிய வைக்கும் கருணை முகம்
காண்பதெப்போதென்று கலங்குகின்றேன்
மூன்று பிள்ளைகளை என்னோடு விட்டு
கட்டுடலை மண்ணோடு விட்டு
முட்டுமுகில் கடந்து சென்ற நாளிலிருந்து
ஒட்டுமொத்தமாய் உருக்குலைந்து போனோமே
பரலோகம் சென்றதேனோ தலைவா
பரலோகத்தில் மீண்டும் நாமிணைந்து
பரமன் பணி செய்துநிற்க
பாதம் பணிந்து நிற்பேனய்யா

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஆறாத்துயரில் அன்பு மனைவி
**சாந்தி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழிந்தோடும் விழி நீர்

தேனினும் இனிய என் அப்பாவே
என் சிந்தையில் நிறைந்த தெய்வமே
பாசத்தின் மலராய் மணம்வீசிய என் அப்பா நீ
காட்டிய பாசத்தினை இனி யாரிடம் பெறுவேன்
கண்களில் உங்கள் உருவக் காட்சி கண்டேன்
கானல் நீராய் மாறிச் சென்றதேனோ?
சயந்தனா என்று ஆசையாய் அழைப்பீர்கள் – எனை
தவிக்கவிட்டுத் தனிவழி சென்றதேனோ?

புண்ணில் வேல் தைத்தவளாய் நான் துடித்துத் துடித்துப்
புலம்பியழ புறப்பட்டுப் போனதேன்
விழிநீர் சிந்தி இங்கு வெதும்புகின்றேன்
வெறும் வார்த்தையும் பேசாமல் வெளிக்கிட்டதேன்?
இன்பம் தரும் இன்சொல் பொழிவீர்கள்
இதையெல்லாம் நான் எப்போ கேட்பேன் அப்பா
உங்கள் பிரிவு தாங்காது மெழுகுவர்த்தியாய் உருகுகின்றேன்
மெல்ல வந்து ஒருமுறை என்னைப் பார்ப்பீர்களா?

உங்கள் நினைவு என்னை விட்டு அகலாதப்பா
உங்கள் உருவத்தை ஒருமுறை காட்டப்பா
உங்கள் வண்ணமுகம் பார்க்க வேண்டுமப்பா – வருவீர்களா?
உங்கள் ஆத்மா சாந்தி பெற
இறைவன் பாதம் பணிகின்றேன்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**விழிநீர் சிந்தும் அன்பு மகள்**
**சயந்தனா**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாங்குவேனோ உன் பிரிவை

உருகுகின்றேன் உருகுகின்றேன் உள்ளம் வெதும்பி
உருகுகின்றேன் – எனது
உள்ளக் குமுறல் உங்களுக்குக் கேட்கவில்லையா?
என் அப்பாவே என் ஆசை அப்பாவே

என்ன நடந்தது ஏமாற்றி விட்டீர்களே?
என்னசெய்குவேன் ஏது செய்வேன் எனக்குப் புரியவில்லை
எல்லாப் பொறுப்பையும் என்னிடம் தந்துவிட்டு
ஏமாற்றிவிட்டுப் போனீர்களா அப்பா

மறைந்து போனதென்ன? இந்த மண்ணுலகில்
நானிருந்து மனமுடைந்து போகின்றேன்
மனம் நிறைய என்முன்னே வந்து போவீர்களா?
என் மனக்குமுறல் மாறுவதற்கப்பா

உறக்கம் கலைந்து ஓடி வருவீர்களென்று நினைத்தேன்
உறக்கத்தில் விழிக்காமல் உறங்கிவிட்டீர்கள்
உங்களைக் பறிகொடுத்துவிட்டு பதைபதைத்துப் புலம்புகின்றேன்
பார்க்காமல் இருப்பதற்குப் பரிதாபம் வரவில்லையா?

எங்கிருந்தாலும் ஓடி வருவாயப்பா
வழிநெடுகப் பார்த்து நிற்பேனப்பா
கண்ணில் உயிரை வைத்துக்கொண்டு
இன்று காற்றில் கலந்துவிட்டாய் அப்பா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த மண்ணில் உங்களைப் போல்

இனி யாரை நாங்கள் காண்போம்

விண்ணில் நட்சத்திரமாய் மின்னி பிரியும் உயிர்

என்று பிறர் சொல்லக் கேட்டேனப்பா – இனி

நான் உன்னை எந்த விண்மீனாய்

காண்பேனோ?

எத்தனை முறை என்னை நாளெல்லாம்

அழைத்தாயோ அப்பா

இனி என்னை உங்ளைப்போல் யார்? என் பெயரை அழைப்பார்கள்

உங்களின் உடலோடு எம் வீடும் வெறிச்சோடிப் போய்விட்டதே

என்செய்வேன் என்று எனக்கே புரியவில்லை

உங்கள் ஆத்மா சாந்திபெற வயலூர் முருகன்

பாதம் பணிகின்றேன்

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

தாங்கொணாத்துயரில்
அன்பு மகன்
**சயந்தன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடைக்குட்டியின் கண்ணீர்ப் பூக்கள்

என் இனிய அப்பாவே! என் அருமை அப்பாவே!
உங்களுக்கு என்னதான் நடந்ததப்பா – நீங்கள்
இறந்தது உண்மைதானா? – நிஜம்தானா?
எங்களுக்கு ஒன்றுமே புரியவில்லை
பாசத்தோடு என்னை வளர்த்தீர்கள்
பசிக்குது என்று சொல்லாது காத்தீர்கள்
மரணம் வந்துதான் மரணித்துப் போனீர்கள்
மறக்கமுடியவில்லை மனக்கவலையை மாற்ற வருவீர்களா?
ஏன்தான் ஏங்கவைத்து ஏணி ஏறினீர்கள்?
ஏமாற்றிவிட்டு ஏறி சென்றுவிட்டீர்களே
ஏறெடுத்தும் பார்க்காமலும் போய் விட்டீர்கள்
ஏன்தான் இப்படி மறந்தீர்கள் அப்பா?
எனை விட்டுப் போனதை எளிமையாய் வந்து சொல்வீர்களா?
எப்போ வருவீர்கள் என்று காத்திருப்பேன் அப்பா
படித்துப்பதவி பெறுவதை பார்ப்பீர்களென்று இருந்தேன்
பார்க்காமல் பரகதியும் சென்றுவிட்டீர்கள்
எப்படி தீர்ப்பேன் என் கடமைகளை
வந்து விடமாட்டீர்களா என் அருகே
உங்கள் ஆத்மா சாந்திபெற இறைவன் பாதம் இறைஞ்சுகிறேன்

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கலங்கும் கண்ணீரில்
அன்பு மகள்
**சுகீரத்தனா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயாரின் உள்ளக் குமுறல்

என் மகனே தவப்பயனாய் உனைப் பெற்றெடுத்தேன்
தரணியில் எனைத் தவிக்கவிட்டுப் போனதேனோ
தரணி போற்ற வாழ்ந்தாயே என் தனயனே
தன்நலம் கருதாத தவக்கொழுந்தல்லவா நீ - உன் தாயை

தவித்துத் தவித்துப் புலம்ப வைத்துவிட்டு
தனிமரமாய் எங்கு சென்றீர் ஐயா?
அன்பைப் பொழிந்து நிற்பாயே - உன்னை
அரவணைக்க முடியாமல் போய்விட்டாய்

பெற்ற தாய் நானிருக்க என் ஆசை மகனே
பெரும்பயணம் போன காரணம்தான் என்ன?
என்நெஞ்சு வெடிக்கிறதே என் அருமை மகனே
என்நெஞ்சில் எப்போது வந்திருப்பாய்?

ஏங்கி ஏங்கித் தவிக்கின்றேன் என் மகனே
ஏன்? தான் ஏமாற்றிவிட்டுப் போனாய்?
மனிதருள் மாணிக்கமாய் விளங்கி வாழ்ந்தாய்
மரணத்தை நாடி மர்மமாய் சென்றீரே

உன்னை மறக்க முடியவில்லை, இது விதியா? இறைவன்
ஏற்பாடா? எனக்குப் புரியாமல் புலம்புகின்றேன்
துல்லியமாய் என் அருகே வருவாயய்யா
தூரவழியில் பார்த்திருப்பேன்

உன் ஆத்மா சாந்தி பெற ஐயனார் பாதம் பணிகின்றேன்

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அவலக்குரலொலிக்கும்

**அம்மா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகேதரர்கள் புலம்பல்

காலச் சக்கரம் சுழல்கின்றது, காலச்சக்கரத்தில்
காவியமாகிப் போன எங்கள் அண்ணாவே
ஒருகணம் எம் நெஞ்சு வலிக்கிறதே – உன் பிரிவு
தாங்காமல் தவிக்கின்றோம் அண்ணா!

நாடிவந்தவரை நண்பனாய் பார்த்து நல்லுவகை செய்தீர்கள் – உனை
நாடி வருபவர்க்கு நல்ல பதில் சொல்ல வருவீர்களா? அண்ணா
கண்களில் நீர்சொரிய கலங்கி நிற்கின்றோம் – அண்ணா
கணப்பொழுதில் எங்கள் முன்னே நிற்பாயா?

நேசத்தையெல்லாம் நெஞ்சமதில் விதைத்துவிட்டு
நெஞ்சம் மறந்து நெடுந்தூரம் போனதேனோ?
மண்ணில் ஒன்றாக மலர்ந்தோம் அண்ணா – அந்த
மலரில் ஒன்று மறைந்தகாரணம் தெரியவில்லை

வேதனைத் தீயில் வெந்திடும் உறவுகள் – இங்கே
விரைந்து ஏன் வந்தது? விண்ணக வாசல்
வீட்டோடு இங்கு விம்மி அழும் குரல்களை
பாட்டு என்று நினைத்தோ பரகதி சென்றாய்

உன் ஆத்மா சாந்திக்கு இறைவன் பாதம் பணிகின்றோம்

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**அன்புக்குரிய சகோதரர்கள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செல்லத் தங்கையின் தவிப்பு

பாசத்தோடு பழகும் நேசமான அண்ணா – எனை
பரிதவிக்க விட்டு விட்டு போனதேன்?

பாசமலராய் மணம் வீசிய என்னருமை அண்ணா – உன்
பாசத்தினை என்றும் மறப்பேனா?

புன்னகை பூத்த உங்கள் முகம் பூமாலைக்குச் சொந்தமானதா
போனவழியும் பூநிறைந்ததுவோ அண்ணா?

எள்ளளவும் நினைக்கவில்லை இப்படி நடக்குமென்று
என்னவென்று நான் யமனிடம் கேட்பேன்?

ஏன் இந்த வேதனை என்று எனக்குப் புரியவில்லை
எங்களைத் தேற்றுவதற்கு ஏறெடுத்துப் பார்ப்பாயா?

என் ஏக்கம் தீர்க்க எப்போ என் பக்கம் வருவாய்?
எனை ஏமாற்றி விடாதே அண்ணா?

அரைவயதில் ஆறு கடந்துவிட்டாயே – என்னால்
ஆறி இருக்க முடியவில்லை அண்ணா

உன் ஆத்ம சாந்திக்காக அம்மன் அருள் வேண்டி
பிரார்த்திக்கின்றேன்

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

தாங்கொணாத் தவிப்பில்
உன் அருமைத் தங்கை
**நாகஜனனி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மைத்துனர்கள் துயரம்

நண்பனாய், மைத்துனனாய், சகோதரியின் காவலனாய்
ஒட்டியிருந்த உறவே எம்மை விட்டுப் பிரிய மனம் வந்ததோ?

உலகம் சுற்றுகிறது இயற்கைதான்
இருந்தும் மறக்க முடியவில்லை உன் இழப்பை

பொன் நகரில் பிறந்தாய் பிரான்ஸ் தேசம் குடிபுகுந்தாய்
புகுந்த இடத்தில் போனதே உன் உயிர் புலம்பித் தவிக்கின்றோம்

புலம்பித் தவிக்கும் உன் உறவைப் பார்க்க ஒருமுறை
புறப்பட்டு வருவாயா? உறவாடி மகிழ

தவிக்கும் தாரத்திற்கும் பிள்ளைகளுக்கும்
தள்ளாத சுமைதனைத் தள்ளிவிட்டு

தனி இடம் தேடினாயோ?
தாங்குவோமோ உன் பிரிவை

வரமாட்டீரா? எம் அருகே
வாவென்று அழைக்கின்றோம்!

உம் ஆன்மா சாந்திபெற இறைவன் பாதம் தொழுகின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

தாங்கொணாத் துயரில்
**மைத்துனர்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மைத்துனிகள் மனக் குமுறல்

எங்கள் அருமை மைத்துனனே – ஏன்?
உனக்கு இந்த விதி

அன்பான தவக்கொழுந்தே, தரணி போற்ற வாழ்ந்த உத்தமனே
தனிவழி சென்ற காரணம் தான் என்ன?

அன்பிற்கும் பண்பிற்கும் அடித்தளம் அமைத்தவனே
அரை வயதில் அவசரமாய் அகன்றதேனோ?

வான் நட்சத்திரங்கள் அழைத்தனவோ – நீ
வானுலகம் விரைந்து செல்ல?

மனைவி மனம் பதைக்க மக்கள் ஓலமிட
மறைந்து சென்ற காரணத்தைச் சொல்லு? – இந்த

மண்ணுலக வாழ்வு பொய் என்றோ – நீயும்
மாநிலம் விட்டு மரணித்துச் சென்றாய்!

மறக்கவும் முடியவில்லை!, மனம் ஆறவும் முடியவில்லை!
மைத்துனிமாரைப் பார்க்க மறக்காமல் வருவீரா?

உம் ஆன்மா சாந்திபெற கண்ணகி அம்மன்
அருள் வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

தாங்கொணாக் குமுறலில்
**மைத்துனிகள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாமி, மாமிமார் பிரலாபம்

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும்
தெய்வமாகிவிட்ட எங்கள் மருமகனே

உங்கள் மறைவை நினைத்து எங்கள்
உள்ளம் உறங்கவில்லை

தவிக்கின்றோம், தவிக்கின்றோம் ஐயனே உன்
தாரம் இழந்து தனிமரமாய் போனதற்கு

மக்களில் மாணிக்கமாய் மகளுக்கேற்ற மருகனாய்
மாமி என்ற வார்த்தைக்கு மறுவார்த்தை பேசாத மாசற்ற சோதியே!

மணிக்கொழுந்தே ஐயா, உன் அழகு முகம்
காணாமல் அலறி விழுகின்றோம்!

இனி எப்போ காண்போம்? உன் முகத்தை
இங்கே எமைத் தேடி வருவாயா?

உம் ஆன்மா சாந்திக்கு வயலூர் முருகன் பாதம் பணிகின்றோம்.

ஓம் *சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெறாமக்கள் பெருந்துயர்

அன்புள்ளம் கொண்ட பெரியப்பா – உன்னில்
அளவில்லாப் பாசம் கொண்டிருந்தோம்

மென்மை மனங் கொண்ட பெரியப்பா
மேன்மையாய் வாழ்ந்து காட்டினீர்கள்

நித்தம் , நித்தம் நாம் நிம்மதி இழந்திருக்க
நித்திரையை நிறைவாகக் கொண்டதேனோ!

சத்தம் போடாமல் எங்கு சென்றீர்கள் – நாம்
சந்தோஷமின்றி சஞ்சலப் படுகின்றோம்!

எங்கு சென்றீர்கள்? நாங்கள் ஏமாந்து நிற்கின்றோம்
எங்களிடம் ஓடிவருவீர்களா?

உங்கள் ஆன்மா சாந்திக்கு முருகமூர்த்தி
அருள் வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித நேயத்தின் உறைவிடம்

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"

எனும் வள்ளுவர் வாய்மொழிக்கு வரைவிலக்கணமாக வாழ்ந்து காட்டியவர் அமர் நடேசன் சத்தியசீலன். வானுலகில் வாழும் தேவர்களில் ஒருவனாக மதிக்கப்படுவார் என்பதுஉண்மை. இவர் மனைவிக்கு ஏற்ற மணாளனாய், மக்களுக்கு மாணிக்கமாய், இன்சொல் பேசி அனைவரையும் அணைத்து வாழ்ந்து மறைந்த மாமனிதர். இவரின் இழப்பு அனைவருக்கும் பேரிழப்பாகும். தாம் கொண்ட கொள்கையினில் உறுதுணையாய் நின்று நல்ல குடும்பம் உருவாக உழைத்த உத்தமர்.

காலனவன் கைப்பிடியில் அகப்பட்டு கடந்து நிலவுலகை நீத்தபின்பும், இன்னும் அவர் நினைவு அனைவரின் மனத்திலும் நிறைந்திருக்கும்.

காயாத கண்ணீரும், தேறாத உள்ளமும் கொண்டு துயருறும் அமரர் சத்தியசீலனின் குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரின் ஆன்மா சாந்திபெற ஸ்ரீசொர்ணாம்பிகை சமேத சொர்ணலிங்கேஸ்வரரின் பாதங்களைப் பணிந்து பிரர்த்திக்கின்றேன்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஆசிரியை
**கனகசபை. மகாலெட்சுமி**
**[சிவனடியாள்]**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னாரின் உற்றார், உறவினர், நண்பர்கள் பிரிவுத்துயர்

சத்தியசீலா சத்தியமாய் நீ எங்கே போனாய்?
சந்திர மண்டலமா? சதாசிவன் மடியிலா?
எங்கள் உறவுக்கோர் அன்பான உயிர் நண்பனே
உறவுகள் மறந்து போனதேனோ?
நட்புக்கோர் இலக்கணமாய் அமைந்தாய்
நட்டாற்றில் தவிக்கவிட்டு நெடும்பயணம் சென்றுவிட்டாய்
பாசத்தைப் பொழிந்து பரிவு காட்டினாய்
பரிதவிக்கும் நிலையை ஏன்? வைத்தாய்
இத்தனையும் நிறைந்து வாழ்ந்துவிட்டு
ஈசனடி போய்ச் சேர்ந்தாயோ?

உந்தன் ஆத்மா சாந்திபெற இறைவன் பாதங்களைப் பணிகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

# தேற்றம்

நேற்றிடை இருந்த மாந்தர்
நிலமிசை நீத்துப் போவார்
ஆற்றிடைத் துரும்பா யாகும்
அகிலத்து வாழ்வை நீத்து
போற்றிடும் ஈசன் பாதம்
சேர்வதே இன்பமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

மாணிக்கவாசகர்

அருளிச் செய்த

# சிவபுராணம்



நூற் சிறப்பு

**தொல்லை யிரும்பிறவிச் சூழுந் தளைநீக்கி**
**அல்லலறுத் தானந்த மாக்கியதே – எல்லை**
**மருவா நெறியளிக்கும் வாதவூர் ரெங்கோன்**
**திருவா சகமென்னுந் தேன்.**

**திருச்சிற்றம்பலம்**

நமச்சிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க
கோகழி ஆண்ட குருமணி தன் தாள் வாழ்க
ஆகம மாகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகன் அனேகன் இறைவன் அடி வாழ்க
வேகம் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்தன் பெய்கழல்கள் வெலக்
புறந்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
சிரம்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஞ்ஞானந் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவுறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அளிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்ற மனம்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேன்ஊறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோர் ஐந்துடையாய் விண்ணோர்களேத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் றன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல் போர்த்தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்காப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துஉள் உருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற்கடையாய் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனார் அமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாலிக்கும் ஆலியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில் வஞ்சம்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒலிக்கும் ஒளியானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈசனடி போற்றி எந்தையடி போற்றி
தேசனடி போற்றி சிவன் சேவடிபோற்றி
நேயத்தே நின்ற நிமலனடி போற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னடி போற்றி
சீரார் பெருந்துறைநம் தேவனடி போற்றி
ஆராத இன்பம் அருளுமலை போற்றி
சிவனவன் என் சிந்தையுள் நின்ற அதனால்
அவனருளாலே அவன் தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணந்தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன் யான்
கண்ணுதலான் தன்கருணை கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற்கு எட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொழியாய்
எண்ணிறந் தெல்லை யிலாதானே நின் பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருகமாகிப் பறவையாய் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய் பேயாய்க் கணங்களாய்
வல்லசுரராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லா நின்ற இத்தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறைந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யே உன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்ய என் உள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா என ஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமான னாம் விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞானமாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞான மில்லாதேன் இன்பப் பெருமானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீரா யுருக்கியென் னாருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக்கு அன்பனே யாவையுமாய் அல்லையுமாய்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னை யாட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாய் மிக்காய் நின்ற
தோற்றச் சுடரொளியாய் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவே என் சிந்தனையுள்
ஊற்றான உண்ணா ரமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேன் எம் ஐயா அரனே ஓ என்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி அறுப்பானே ஓ வென்று
சொல்லற்கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தினுள்ளார் சிவனடிக்கீழ்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

**திருச்சிற்றம்பலம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்த சஷ்டி கவசம்

(திருச்சீரலைவாய் - திருச்செந்தூர்)



### நேரிசை வெண்பா

துதிப்போர்க்கு வல்வினைபோம் துன்பம் போம் நெஞ்சில்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் கதித்தோங்கும்
நிஷ்டையும் கைகூடும் நிமலர் அருள் கந்தர்
சஷ்டி கவசம் தனை.

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சஷ்டருக்குதவும் செங்கதிர் வேலோன்
பாதம் இரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணியாட
மைய நடனஞ் செயும் மயில்வாகனனார்
கையில் வேலால் எனைக் காக்க என்று வந்து
வரவர வேலாயுதனார்! வருக!
வருக! வருக! மயிலோன்! வருக!
இந்திரன் முதலா எண்டிசை போற்ற
மந்திர வடிவேல்! வருக! வருக!
வாசவன் மருகா! வருக! வருக!
நேசக் குறமகள் நினைவோன்! வருக!
ஆறுமுகம் படைத்த ஐயா! வருக!
நீறிடும் வேலவன்! நித்தம் வருக!
சிரகிரி வேலவன்! சீக்கிரம் வருக!
சரவணபவனார்! சடுதியில் வருக!
ரவண பவச ரரரர ரரர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரிவண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரவண வீரா! நமோ நம
நிபவ சரவண! நிற நிற நிறென
வசர வணபவ! வருக! வருக!
அசுரர் குடி கெடுத்த ஐயா! வருக!
என்னையாளும் இளையோன் கையில்
பன்னிரண்டாயுதம் பாசாங்குசமும்
பரந்த விழிகள் பன்னிரண்டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன்! வருக!
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையும் கிலியும்
கிலியும் சௌவும் கிளரொளியையும்
நிலைபெற்றென் முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் நீயும் தனியொளியொவ்வும்
குண்டலியாம் சிவ குகன்! தினம் வருக!
ஆறுமுகமும் அணிமுடியாறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகு குண்டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல் பூஷணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழகுடைய திருவயிறுந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்னம் பதித்த நற்சீராவும்
இரு தொடை அழகும் இணை முழந்தாளும்
திருவடி அதனில் சிலப்பொலி முழங்க
செக்கண செககண செககண செககண
மொகமொக மொகமொக மொகமொக மொகமொக
நகநக நகநக நகநக நகென



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க!
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க!
ஆண்குறி இரண்டும் அயில்வேல் காக்க!
பிட்டம் இரண்டும் பெருவேல் காக்க!
வட்டக் குதத்தை வல்வேல் காக்க!
பணைத்தொடை இரண்டும் பருவேல் காக்க!
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க!
ஐவிரல் அடியிணை அருள்வேல் காக்க!
கைகள் இரண்டும் கருணைவேல் காக்க!
முன்கை இரண்டும் முரண்வேல் காக்க!
பின்கை இரண்டும் பின்னவள் இருக்க
நாவில் சரஸ்வதி நற்றுணையாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க!
முப்பால் நாடியை முனைவேல் காக்க!
எப்பொழுதும் எனை எதிர்வேல் காக்க!
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க!
வரும் பகல் தன்னில் வச்ரவேல் காக்க!
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க!
ஏமத்தில் சாமத்தில் எதிர்வேல் காக்க!
காக்க! காக்க! கனகவேல் காக்க!
நோக்க நோக்க நொடியினில் நோக்க
தாக்க தாக்க தடையறத் தாக்க
பார்க்கப் பார்க்கப் பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்ல பூதம் வலாட்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராக்கதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசிகாட்டேரி இத்துன்ப சேனையும்
எல்லினும் இருட்டிலும் எதிர்ப்படும் அண்ணரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி
டுடுடு டுடுடு டுடுடு டுடுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை ஆளும் ஏரகச் செல்வ!
மைந்தன் வேண்டும் வர மகிழ்ந்துதவும்
லாலா லாலா லாலா வேஷமும்
லீலா லீலா லீலா நிநோதனென்(று)
உன் திருவடியை உறுதி என்றெண்ணும்
என் தலை வைத்துன் இணையடி காக்க!
என்னுயிர்க்குயிராம் இறைவன் காக்க!
பன்னிரு விழியால் பாலனைக் காக்க!
அடியேன் வதனம் அழகுவேல் காக்க!
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க!
கதிர்வேல் இரண்டும் கண்ணினைக் காக்க!
விழிசெவி இரண்டும் வேலவர்! காக்க!
நாசிகள் இரண்டும் நல்வேல் காக்க!
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க!
முப்பத்திரு பல் முனைவேல் காக்க!
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க!
கன்னம் இரண்டும் கதிர்வேல் காக்க!
என் இளங்கழுத்தை இனியவேல் காக்க!
மார்பை இரத்தின வடிவேல் காக்க!
சேரிள முலைமார் திருவேல் காக்க!
வடிவேல் இருதோள் வளம்பெறக் காக்க!
பிடரிகள் இரண்டும் பெருவேல் காக்க!
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க!
பழுபதினாறும் பருவேல் காக்க!
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனபூசை கொள்ளும் காளியோ(டு) அனைவரும்
விட்டாங்காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக்காரரும் சண்டாளர்களும்
என் பெயர் சொல்லவும் இடி விழுந்தோடிட
ஆனை அடியினில் அரும்பாவைகளும்
பூனை மயிரும் பிள்ளைகளென்பும்
நகமும் மயிரும் நீள்முடி மண்டையும்
பாவைகளுடனே பல கலசத்துடன்
மனையில் புதைத்த வஞ்சனைதனையும்
ஒட்டிய பாவையும் ஒட்டிய செருக்கும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ்சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூதாள் எனைக் கண்டால் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய் விட்டலறி மதி கெட்டோடப்
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுடன் அங்கம் கதறிடக் கட்டு
கட்டி உருட்டு கால் கை முறிய
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகை சொக்கு
குத்து குத்து கூர் வடிவேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலதுவாக
விடுவிடு வேலை வெருண்டது ஓட
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித்தொடர்ந்தோட
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துயரங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏறிய விஷங்கள் எளிதினில் இறங்க
ஒளிப்பும் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதம் சயித்தம் வலிப்புப் பித்தம்
சூலை சயம் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரிதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத் தரணை பருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லாதோட நீ எனக்கருள்வாய்
ஈரேழ் உலகமும் எனக்குறவாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்கா
மண்ணாள் அரசரும் மகிழ்ந்துறவாகவும்
உன்னைத் துதிக்க உன் திருநாமம்
சரவணபவனே! சைலொளிபவனே!
திரிபுரபவனே! திகழொளிபவனே!
பரிபுரபவனே! பவமொழிபவனே!
அரி திருமருகா! அமராபதியைத்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா! குகனே! கதிர் வேலவனே!
கார்த்திகை மைந்தா! கடம்பா! கடம்பனை
இடும்பனை அழித்த இனிய வேல் முருகா!
தணிகாசலனே! சங்கரன் புதல்வா!
கதிர்காமத்துறை கதிர் வேல் முருகா!
பழநிப்பதி வாழ் பால குமாரா!
ஆவினன் குடி வாழ் அழகிய வேலா!
செந்தில் மா மலையுறும் செங்கல்வராயா!
சமராபுரி வாழ் சண்முகத்தரசே!
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என் நா இருக்க யான் உனைப் பாட
எனைத் தொடர்ந்திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவசமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடினேன் நாடினேன் ஆவினன் பூதியை
நேசமுடன் யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னருளாக
அன்புடன் இரட்சி அன்னமும் சொன்னமும்
மெத்த மெத்தாக வேலாயுதனார்
சித்தி பெற்றடியேன் சிறப்புடன் வாழ்க!
வாழ்க! வாழ்க! மயிலோன் வாழ்க!
வாழ்க! வாழ்க! வடிவேல் வாழ்க!
வாழ்க! வாழ்க! மலைக்குரு வாழ்க!
வாழ்க! வாழ்க! மலைக்குற மகளுடன்
வாழ்க! வாழ்க! வாரணத் துவசம்
வாழ்க! வாழ்க! என் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை அடியேன் எத்தனை செயினும்
பெற்றவன் நீ குரு பொறுப்ப(து) உன் கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவளாமே
பிள்ளை என்றன்பாய்ப் பிரியம் அளித்து
மைந்தன் என் மீதுன் மனம் மகிழ்ந்தருளித்
தஞ்சமென்றடியார் தழைத்திட அருள்செய்
கந்த சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசாரத்துடன் அங்கம் துலக்கி
நேசமுடன் ஒரு நினைவதுவாகிக்
கந்தர் சஷ்டிக் கவசமிதனைச்
சிந்தை கலங்காது தியானிப்பவர்கள்
ஒரு நாள் முப்பத்தாறுருக் கொண்டு
ஓதியே ஜெபித்து உகந்து நீறணிய
அஷ்ட திக்குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசை மன்னர் எண்மர் சேர்ந்தங்கருளுவர்
மாற்றலர் எல்லாம் வந்து வணங்குவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவகோள் மகிழ்ந்து நன்மை அளித்திடும்
நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளும் ஈரெட்டா வாழ்வர்
கந்தர் கை வேலாம் கவசத் தடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியால் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லாதவரைப் பொடிப் பொடியாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்காரத்தடி
அறிந்தெனதுள்ளம் அஷ்ட லட்சுமிகளில்
வீர லட்சுமிக்கு விருந்துணவாகச்
சூரபத்மாவைத் துணித்தகை அதனால்
இருபத்தேழ்வர்க்(கு) உவந்(து) அமுதளித்த
குருபரன் பழனிக் குன்றினிலிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி!
எனைத் தடுத்தாட்கொள என்றனதுள்ளம்
மேவிய வடிவுறும் வேலவா! போற்றி!
தேவர்கள் சேனாதிபதியே! போற்றி!
குறமகள் மனமகிழ் கோவே! போற்றி!
திறமிகு திவ்விய தேகா! போற்றி!
இடும்பாயுதனே இடும்பா! போற்றி!
கடம்பா! போற்றி! கந்தா! போற்றி!
வெட்சி புனையும் வேளே! போற்றி!
உயர்கிரி கனகசபைக்கோர் அரசே!
மயில் நடமிடுவோய் மலரடி சரணம்!
சரணம்! சரணம்! சரவண பவ ஓம்!
சரணம்! சரணம்! சண்முகா! சரணம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவள்ளுவரின்
# அன்புடைமை

01. அன்பிற்கும் உண்டோ, அடைக்கும் தாழ்? ஆர்வலர்
புன் கணீர் பூசல் தரும்

02. அன்பு இலார் எல்லாம் தமக்கு உரியார் அன்பு
என்பும் உரியார்ஈ பிறர்க்கு.

03. அன்போடு இயைந்த வழக்க என்ப ஆர் உயிர்க்கு
என்போடு இயைந்த தொடர்பு

04. அன்பு ஈனும் ஆர்வம் உடைமை அது ஈனும்
நண்பு என்னும் நாடாச் சிறப்பு

05. அன்புற்று அமர்ந்த வழக்கு என்ப வையகத்து
இன்புற்றார் எய்தும் சிறப்பு

06. அறத்திற்கே அன்பு சார்பு என்ப அறியார்
மறத்திற்கும்' அஃதே துணை

07. என்பு இல் அதனை வெயில் போலக் காயுமே
அன்பு இல் அதனை அறம்

08. அன்பு அகத்து இல்லா உயிர் வாழ்க்கை வன்பாற்கண்
வற்றல்மரம் தளிர்த்தற்று

09. புறத்து உறுப்பு எல்லாம் எவன் செய்யும் யாக்கை
அகத்து உறுப்பு அன்பு இல் அவர்க்கு

10. அன்பின் வழியது உயிர்நிலை அஃது இலார்க்கு
என்பு தோல் போர்த்த உடம்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காரியசித்திமாலை



பந்தம் அகற்றும் அநந்தகுணப் பரப்பும் எவன்பால் உதிக்குமோ
எந்த உலகும் எவனிடத்தில் ஈண்டி இருந்து கரக்குமோ
சந்தமறை ஆகமங் கலைகள் அனைத்தும் எவன்பால் தகவருமோ
அந்த இறையாம் கணபதியை அன்பு கூரத் தொழுகின்றோம்.

உலகமுழுவதும் நீக்கமற ஒன்றாய் நிற்கும்பொருள் எவன்அவ்
உலகிற்பிறக்கும் விகாரங்கள் உறாதமேலாம் ஒளியாவன்?
உலகம் புரியும் வினைப் பயனை ஊட்டும் களைகண் எவன் அந்த
உலக முதலைக் கணபதியை உவந்து சரணம் அடைகின்றோம்.

இடர்கள் முழுதும் எவனருளால் எரிவீழும் பஞ்செ௭ன மாயும்
தொடரும் உயிர்கள் எவனருளால் சுரர்வழ் பதியும் உறச்செய்யும்
கடவுள் முதலோர்க்கு ஊறின்றி கருமம் எவனால் முடிவுறும் அத்
தடவுமருப்புக் கணபதி பொன் சரணம் அடைகின்றோம்.

மூர்த்தியாகித் தலமாகி முந்நீர் கங்கை முதலான
தீர்த்தமாகி அறிந்தறியாத் திறத்தினாலும் உயிர்க்கு நலம்
ஆர்த்திநாளும் அறியாமை அகற்றி அறிவிப்பான் எவன் அப்
போர்த்த கருணைக் கணபதியைப் புகழ்ந்து சரணம் அடைகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யும் வினையின் முதல்யாவன் செய்யப்படும் அப்பொருள் யாவன்
ஐயமின்றி உளதாகும் அந்தக் கருமப் பயன் யாவன்
உய்யும் வினையின் பயன் விளைவில் ஊட்டி விடுப்பான் எவன் அந்தப்
பொய்யி இறையைக் கணபதியைப் புரிந்து சரணம் அடைகின்றோம்.

வேதம் அளந்தும் அறிவரிய விகிர்தன் யாவன் விழுத்தகைய
வேத முடிவில் நடம் நவிலும் விமலன் யாவன் விளங்குபர
நாதமுடிவில் வீற்றிருக்கும் நாதன்எவன் எண்குணன் எவன்அப்
போதமுதலைக் கணபதியைப் புகழ்ந்து சரணம் அடைகின்றோம்.

மண்ணின் ஓர் ஐங்குணமாகி வதிவான் எவன் நீரிடை நான்காய்
நண்ணி அமர்வான் எவன்தீயின் மூன்றாய் நவில்வான் எவன் வளியின்
எண்ணும் இரண்டு குணமாகி இயைவான் எவன் வானிடை ஒன்றாம்
அண்ணல் எவன் அக்கணபதியை அன்பிற் சரணம் அடைகின்றோம்.

பாச அறிவில் பசுஅறிவில் பற்றற்கரிய பரன்யாவன்
பாச அறிவும் பசுஅறிவும் பயிலப் பணிக்கும் அவன்யாவன்
பாச அறிவும் பசுஅறிவும் பாற்றி மேலாம் அறிவான
தேசன் எவன் அக்கணபதியைத் திகழச் சரணம் அடைகின்றோம்.

**நூற்பயன்**

இந்த நமது தோத்திரத்தை யாவன் மூன்று தினமும் உம்மைச்
சந்தி களில்தோத் திரஞ்செயினும் சகல கரும சித்திபெறும்
சிந்தை மகிழச் சுகம்பெறும்எண் தினம்உச் சரிக்கின் சதுர்த்தியிடைப்
பந்தம் அகல ஓர்எண்கால் படிக்கில் அட்ட சித்தியுறும்.

திங்கள் இரண்டு தினந்தோறும் திகழஒருபான் முறையோதில்
தங்கும் அரச வசியமாம் தயங்க இருபத் தொருமுறைமை
பொங்கும் உழுவ னல்கிளப்பின் பொருவின் மைந்தர் விழுக்கல்வி
துங்க வெறுக்கை முதற்பலவும் தோன்றும் எனச்செப் பினர் மறைந்தார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



திரு நடேசன் சத்தியசீலன்

(வசந்தன், சீலன் - சாந்தினி உணவகம் உரிமையாளர்)

தோற்றம் : 26 .08.1964 மறைவு : 01.09.2018

ஈழ மண்ணிலேஅவதரித்து
பிறந்த மண்விட்டு பிரான்ஸ் நாடு புலம் பெயர்ந்து
வேர் விட்டு துளிர்த்து வளர்ந்த
எங்களின் சீலனே
அனைவரையும் விட்டு போனதெங்கே சொல் நண்பா...?

கண்களில் நீர்பொழிய கைகள் நடுநடுங்க
இலக்கியம் தருமாற இலக்கணம் தமிழ்மாற
எப்படி கவிதைகள் எழுதமுடியும்...?
உன்புகழ் எப்படி பாடமுடியும்...?

அன்பான முகம் அமைதியான தோற்றம்
பண்பாய் பழகும் உன்னை
காலன் சாவெடுத்து போனானே
சாகின்ற வயதா உனக்கு சாதிக்கும் வயது
சாந்தியாய் போனது ஏன் நண்பா...?

அன்று முதல் இன்று வரை - என்றும்
உன்முகம் வாடியதில்லை
உன்னோடு பேசியவர் உள்ளம் - என்றும்
துன்முகத்தை நாடியதில்லை - இன்று
மூடிவைத்து உன்முகத்தை நாங்கள்
சுமந்து கொண்டு செல்லும்
கொடிய நிலை ஏன் நண்பா...?


என்றும் நட்பின் பாவெடுத்து பாடி நிற்கிறோம்
அன்பின் பூவெடுத்து போற்றி நிற்கிறோம்
நலன்கள் பல செய்து நாங்கள் என்றும் வேண்டுகிறோம்
நண்பா உன் சாந்தி என்றும் நலமாக அமையட்டும்
சாந்தி சாந்தி சாந்தி..

இலங்கை இந்திய வர்த்தகர் சங்கம் பிரான்ஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்ப விருட்சம்


நடேசன் + சரசலெட்சுமி
அமரர் சத்திய சீலன்
ஜெயசீலன் + வனிதா
ஞானசீலன் + வத்சலா
அம்பிகைசீலன் + தர்சினி
நாகஜனனி + சிவகணேஷ்
தர்மசீலன் + சலுசா
பரமலிங்கம் + அன்னலெட்சுமி
சாந்தினி
பாலினி
இந்திரா + சௌந்தரலிங்கம்
சுரேஷ்
ரமேஷ் + மாலா
குணேஷ்
ரகு + விஜி
ரேணுகா + அமுதா
சயந்தனா
சயந்தன்
சுகிர்த்தனா

# கண்ணீர் அஞ்சலி



26.08.1964 — 01. 09. 2018

## அமரர். திரு. நடேசன் சத்தியசீலன்

கண்ணுக்குள் நிற்குதையா
கனிவான உன் முகவடிவம்
பார்புகழ நீ இருக்க பார்த்திருந்தோம் வாஞ்சையுடன்
பெருவாழ்வு உனதென்று பெருமையுடன் நாமிருந்தோம்
பாதியிலே உன் வாழ்வை பறித்திடுவான் இறைவனென்றும்
நீதிவழி வாழ்ந்த உன்னை நிரந்தரமாய் பிரிவோமென்றும்
கணமேனும் எண்ணவில்லை கலங்குகின்றோம் எம் சீலா!

பெருமைமிகு வட்டக்கச்சிக்கு நீயும் பெருமைசேர்த்தாய்
பார் புகழும் பாரிசிற்கு நீயும் பலம் சேர்த்தாய்
உன் கையால் விருந்துண்ட உற்றாரும் ஊரவரும்
ஊமையாய் உறைந்திருக்க. இடைநடுவே எமைவிட்டு
ஏன் பிரிந்தாய் எம் சீலா!

தேம்பியழும் உன் மனைவியாளோடும். மக்களோடும்
உற்றாரோடும் உறவினரோடும் - நாமும்
கலந்து கலங்குகின்றோம் கதறுகின்றோம்

உன் ஆத்ம சாந்திக்காய்
இறைவனை வேண்டும்

**மணியம் தாத்தா குடும்பம்**
வட்டக்கச்சி, இராமநாதபுரம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

**தோற்றம்**
26.08.1964



**மறைவு**
01.09.2018

## திரு நடேசன் சத்தியசீலன்

**(வசந்தன், சீலன் - சாந்தினி உணவகம் உரிமையாளர்)**

யாழ். புங்குடுதீவு 10ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸ் PARIS ஐ வசிப்பிடமாகவும்
கொண்ட நடேசன் சத்தியசீலன் அவர்கள் 01-09-2018 சனிக்கிழமை அன்று இறைவனடி
சேர்ந்தார் என்ற செய்தியை கேட்டபோது அதை நம்பமுடியவில்லை.

எப்பொழுதும் சிரித்தமுகம் உறவு சொல்லி அழைக்கும் பழக்கம்
எல்லோருடனும் வயசு வித்தியாசமின்றி சகசமாகப்பழகும் குணம்
பெயருக்கேற்ப சத்திய சீலனை இழந்து நிற்கின்றோம்
வெறுக்குமில்லாத பெரும் புகழ் இவருக்குண்டு இன்று பல்சுவை உணவுகளை நாம்
பல்வேறு எம்மவர் உணவகங்களில் சுவைக்கின்றோம்
ஆனால் ஆரம்ப காலங்களில் எந்த உணவகங்களோ இல்லாதநிலை அந்த
காலப்பகுதியில் பிரான்சிலே எம்மவர்களால் அமைக்கப்பெற்ற உணவகங்களில்
இவரது இரண்டாவதாகும் அவரது உணவுகளின் சுவையும் அன்பான உபசரிப்பும் இன்றும்
அவரது பெயரை உயர்த்தி நிற்கிறது

இந்த துயர வேளையிலே அவரது துணைவியார் சாந்தினி பிள்ளைகள் சயந்தனா,
சயந்தன், சுகிர்த்தனா மற்றும் அன்புச்சகோதரர்கள் ஜெயசீலன், ஞானசீலன்,
அம்பிகைசீலன், நாகஜோதி, தர்மசீலன் மற்றும் உறவுகள்
அனைவரதும் இக்கட்டான வேளையிலே
புங்குடுதீவு மக்கள் ஒன்றியமும் தனது இரங்கலையும் ஆறுதலையும்
தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்ம சாந்தி வேண்டி பிரார்த்தித்து நிற்கிறது

**ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!**
**புங்குடுதீவு மக்கள் ஒன்றியம் - FRANCE**
**பாரதி விளையாட்டுக்கழகம் - FRANCE**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்



"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்நன்றி கொன்ற மகற்கு"

**நாவெழாத வேளையில் நவில்கின்றோம் நன்றி.**

**எங்கள் குடும்பத்தில் சோக நிகழ்வொன்று நிகழ்ந்தது. ஆம், எங்கள் குடும்ப விருட்சம் எம்மையெல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு விண்ணகம் விரைந்த வெங்கொடுமையின் சாக்காட்டின் வேதனையால் துடித்த எம் துயரினைப் பகிர்ந்துகொண்டு எமக்கு ஆறுதல் கூறியவர்கள், அயல்நாடுகளிலிருந்து இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டவர்கள், அலைவரிசை மூலம் ஆறுதல் கூறியவர்கள், பத்திரிகை மூலம் கண்ணீர் அஞ்சலி செலுத்தியவர்கள், அந்தியேட்டி சபீண்டி கரணக் கிரியைகள் செய்த குருமார்கள் பலவித வழிகளில் உதவி செய்தவர்களுக்குமான அனைத்து உள்ளங்களுக்கும், இம்மலரினை ஆக்கித் தந்த ஆசிரியைக்கும், குறுகிய காலத்தில் இந்நூலை அச்சிட்டுத் தந்த கொப்பி லா சப்பல் அச்சகத்தினருக்கும், மற்றும் உற்றார், உறவினர், புலம் பெயர் உறவுகள் அனைவருக்கும் அமரரின் பெயரால் நன்றி நவில்கின்றோம்.**

இங்ஙனம்
குடும்பத்தினர் மனைவி, மக்கள்,
தாய், சகோதரர்கள்,
மைத்துன, மைத்துனிகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்

"எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ,
அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையதை எதை இழந்தாய்?
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்.
அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருந்தாய்,
அது வீணாவதற்கு.
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதைக் கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை
மற்றொருவருடையதாகிறது.
மற்றொருநாள்,
அது வேறொருவருடையதாகும்"
இதுவே உலக நியதியும்,
எனது படைப்பின் சாரம்சமுமாகும்.

-பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org